**அ.வ.எண்: 60/2017 நாள்:30.11.2022**

**வா.சா.1. விக்னேஷ்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவா இடத்தில் விக்னேஷ்வர சுவாமி கோவில் இருந்ததற்கு ஆதாரமாக ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கும்பாபிஷேகபத்திரக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் கோவில் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்தின் ஒரு பகுதியில் கோவில் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

2) நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் சொல்லியுள்ள சர்வே எண்ணில் மேற்படி கோவிலானது உள்ளதா என்றால் இல்லை. பாகபிரினை பத்திரத்தின் அசல் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணமான பாகபிரினை சான்றிட்ட நகல் ஆவணத்தில் முதல் பக்கம் இல்லை என்றால் சரிதான். பாகபிரினை பத்திரத்தில் விக்னேஷ்வரர் சுவாமி கோவில் பெயரோ அய்யானார் சுவாமி கோவில் பெயரோ உள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தில் என்னுடைய மூதாதையர் கோவில் கட்டியதற்கான வாசகம் இடம் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் தாவா சொத்துகளை பொறுத்து சர்வே எண்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3) எனவே தாவா சொத்துக்கும் வா.சா.ஆ 5 ஆவணத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் குத்தகைதாரர்கள் என்று அசல் வழக்கில் கட்சி சொல்லியுள்ள நிலையில் மேற்படி பிரதிவாதிகளை வெளியேற்ற பாபநாசம் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேனா என்றால் மனு கொடுக்கவில்லை. மேற்படி பிரதிவாதிகள் குத்தகைதாரர்கள் என்பதால் தான் நான் மனு எதுவும் வெளியேற்ற கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4) 3 அயிட்ட சொத்துக்கு தரப்பினர்கள் யாரையும் சேர்க்கவில்லை என்றால் நான் நேரடியாக அனுபவித்து வருவதால் சேர்க்கவில்லை. நான் டிரஸ்டி என்பதற்கு

ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கோவிலானது குடும்ப அறக்கட்டளைக்கு சொந்தமானது அதனால் தாக்கல் செய்யவில்லை. குடும்ப அறக்கட்டளைக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ.5 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குடும்ப அறக்கட்டளை பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதால் நான் குடும்ப அறக்கட்டளைக்கு சொந்தமானது என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

5) அருள்மிகு விக்ணேஷ்வர சுவாமி கோவில் குடும்ப அறக்கட்டளை என்று ஒரு அறக்கட்டளையே இல்லை அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் அருள்மிகு விக்ணேஷ்வர சுவாமிகள் மற்றும் அய்யனார் சுவாமிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் மேற்படி வழக்குரையில் குறுந்தலைப்பில் அய்யனார் சுவாமிகள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதன் காரணமாகவும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

6) வா.சா.ஆ.2 ஆவணம் மற்றும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் சொல்லியுள்ள கும்பாபிஷேகம் 1931ல் நடந்ததாக சொல்லியுள்ளது என்றால் சரிதான் அந்த கும்பாபிஷேகம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் முத்துகுமார பிள்ளை தலைமையில் நடத்தியதாக கண்டுள்ளது அவருடைய வாரிசுகள் பட்டியல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7) முத்துகுமார பிள்ளை மற்றும் கணபதியார் பிள்ளை ஆகிய இருவரும் சகோதரர்கள் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கணபதியார் பிள்ளையின் வாரிசுகள் பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ளது. வெங்கட்ராமன் பிள்ளை யார் என்றால் எனது தாத்தா. மேற்படி வெங்கட்ராமன் பிள்ளை வாரிசு பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை பஞ்சாபிகேஷன் அருள்மிகு விக்ணேஷ்வர சுவாமி கோவில் மற்றும் அய்யனார் கோவில் அவருக்கு பிறகு வாதியானவர் அறங்காவலராக

இருந்து பராமரித்து வர வேண்டியது என்று எழுத்து மூலமான ஆவணங்கள் எழுதி கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதியின் தந்தை உயிருடன் இருக்கும் வரை தாவா சொத்து சம்பந்தமாக எந்த பிரச்சனையும் நடக்கவில்லை என்றால் சரிதான். 2017ல் தான் முதன்முதலாக தாவா சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8) வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்களுக்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்களில் விக்னேஷ்வரர் ஆலயம் கண்டுள்ளது தற்போது தான் தெரிந்து அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1,2, 3 பிரதிவாதிகள் தான் தாவா சொத்தின் 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களை குத்தகை சாகுபடி செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 3வது அயிட்ட சொத்தை மருதையன் என்பவர் சாகுபடி செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் எனவே தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.